
MINISTRY OF HEALTH
SINGAPORE




# கவலையிலிருந்து காக்கும் கவசம்

**முன்கூட்டியே வாங்கும் தகுந்த மெடிஷீல்டு காப்புறுதி, பெருமளவு மருத்துவமனை கட்டணங்கள் கட்ட நேரிடும் போது உங்களைக் காக்கும்.**

திருவாட்டி சுமானா பிந்தி கஸ்பிக்கு(கீழே) நீரிழிவு நோயும் உயர் இரத்த அழுத்தமும் இருப்பதாகக் கண்டறியப்பட்டு ஆறே மாதங்களில் அவருக்குத் திடீரென சுவாசப் பிரச்னை ஏற்பட்டது.

இதற்குமுன் வெளிநோயாளி சிகிச்சைக்கு மட்டுமே அவரை அழைத்துச் செல்ல நேரிட்டதால், இம்முறை சுவாசப் பிரச்னையை எளிதில் குணப்படுத்திவிடலாம் என அவரது குடும்பத்தினர் நினைத்தனர்.

அவரது மருமகன் திரு அப்துல் ஹமீது முகம்மது கூறியதாது: “அது சிறிய பிரச்னை என்று நினைத்தோம். நிபுணத்துவ வெளிநோயாளி மருந்தகத்திற்கு அவரை அழைத்துச் சென்றோம். சிகிச்சை எளிதாகவும் துரிதமாகவும் இருக்கும் என்று நினைத்தோம்.”

மாறாக, மருத்துவரின் சொற்கள் அதிர்ச்சி அளித்தன: திருவாட்டி சுமானாவுக்குக் கடுமையான நிமோனியா பாதிப்பும் சிறுநீரகக் கோளாறும் இருந்தது. அவர் மருத்துவமனையில் தங்க நேரிட்டது.

அலெக்சாண்ட்ரா மருத்துவமனையில் வகுப்பு B2 படுக்கைப்பிரிவில் சேர்க்கப்பட்ட அவர், சென்ற ஆண்டு அக்டோபர் முதல் நவம்பர் வரை கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் மருத்துவமனையில் தங்கியிருந்தார். சுவாசச் சாதனத்தின் உதவி தேவைப்பட்டதால் தீவிர சிகிச்சைப் பிரிவில் 20 நாட்கள் தங்கினார்.

“அவரது உடல்நிலை இவ்வளவு மோசமாக இருக்கும் என்றோ, இவ்வளவு காலம் மருத்துவமனையில் தங்க நேரிடும் என்றோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை,” என்றார் மூத்த தொழில்நுணுக்கச் சொத்து நிர்வாக அதிகாரியான திரு ஹமீது.

தனது மாமியாரின் மருத்துவமனை கட்டணம் அரசாங்கத் தள்ளுபடிகளுக்குப் பிறகு $26,407 ஆக இருப்பதைப் பார்த்தவுடன் அவர் பதறிவிட்டார்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அடிப்படை மெடிஷீல்டு திட்டத்தின்கீழ் காப்புறுதித் திட்டம் வாங்க திருவாட்டி சுமானாவுக்கு திரு ஹமீது உதவியிருந்தார். அதோடு, அந்த இல்லத்தரசியின் மெடிசேவ் கணக்கில் பணம் போடவும் உதவியிருந்தார். இருந்தாலும், இவ்வளவு அதிக மருத்துவமனை கட்டணத்தைக் கட்ட போதிய நிதி இருக்குமா என்று அவருக்கு உறுதியாகத் தெரியவில்லை.

அவர் உடனே மருத்துவச் சமூகச் சேவையாளர்களை அணுகினார். ஒரு வாரத்திற்குள், அவருக்கு விடை கிடைத்தது: மெடிஷீல்டு, மெடிசேவ் ஆகியவற்றுடன், மருத்துவக் கட்டணம் $26,407ல் இருந்து சுமார் $6,630 ஆகக் குறைந்தது. கட்டணத்தில் சுமார் 60 விழுக்காட்டை மெடிஷீல்டு அடைத்தது.

“மெடிஷீல்டில் முதலீடு செய்யும் முடிவு பலனளித்தது. நீங்கள் இதில் கொஞ்சம் பணம் போடுகிறீர்கள், ஆனால் அதைவிட அதிகமாக நீங்கள் அதிலிருந்து கோரலாம். அதுவும் மருத்துவச் செலவுகள் மிக அதிகமாகக்கூடும் என்ற நிலையில் இது எப்போது தேவைப்படும் என்று உங்களுக்குத் தெரியாது. இம்முறை, மெடிஷீல்டு எங்களுக்கு உண்மையில் உதவியது,” என்றார் திரு ஹமீது.

குறைந்த செலவிலான மருத்துவக் காப்புறுதி திட்டமான அடிப்படை மெடிஷீல்டு, திருவாட்டி சுமானா போன்ற நோயாளிகளுக்குப் பெரிய மருத்துவமனை கட்டணங்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது. வகுப்பு B2, C படுக்கைப்பிரிவுகளுக்காக வடிவமைக்கப்பட்ட மெடிஷீல்டு, இவ்விரு படுக்கைப்பிரிவுகளின் பெரிய கட்டணத் தொகைகளில் 60 விழுக்காட்டை ஏற்கும்.

அண்மை மெடிஷீல்டு பரிசீலனையின் ஒரு பகுதியாக, பெரிய கட்டணங்களின் இணைத் தொகையைத் தற்போதைய 40 விழுக்காட்டில் இருந்து 20 விழுக்காடாக மேலும் குறைக்க சுகாதார அமைச்சு பரிந்துரைக்கிறது. கட்டும் பிரிமியமும் ஏற்புடைய வகையில் இருக்கும்.தாங்கள் கட்டும் இணைத் தொகை மேலும் குறையும் என்பதால், அடிப்படை மெடிஷீல்டு திட்டம் மேலும் சீர்செய்யப்படுவதை திருவாட்டி சுமானா போன்ற குடும்பங்கள் கண்டிப்பாக வரவேற்கும்.

வயது மூத்த சிங்கப்பூரர்கள் தங்களது மருத்துவக் கட்டணங்களையும், உயர்த்தப்பட்டுள்ள மெடிஷீல்டு பிரிமியங்களையும் கட்ட உதவியாக, 51 வயது முதலான அனைவரின் மெடிசேவ் கணக்குகளிலும் அரசாங்கம் இவ்வாண்டு $450 வரை பணம் போடுகிறது.

ஒருவர் கூடுமானவரை முன்கூட்டியே மருத்துவக் காப்புறுதித் திட்டம் வாங்கவேண்டிய அவசியத்தையும் திருவாட்டி சுமானாவின் சூழ்நிலை எடுத்துக்காட்டுகிறது. “நல்ல வேளையாக 15 ஆண்டுகளுக்கு முன்பே என் மாமியாருக்குக் காப்புறுதி வாங்கியிருந்தோம்,” என்றார் திரு ஹமீது. “தயாராக இருப்பது நல்லது. மெடிஷீல்டு இருப்பதால், எங்கள் குடும்பத்தில் வேறு எவருக்காவது வருங்காலத்தில் பெருமளவு மருத்துவக் கட்டணம் எழுந்தால் கவலைப்படத் தேவையில்லை என்று நினைக்கிறேன்.”

திருவாட்டி சுமானா மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பி மூன்று மாதங்கள் ஆகிறது. அவர் புத்துயிர் பெற்றிருப்பதாக திரு ஹமீது சொன்னார். வழக்கமான மருந்துகள் தவிர, அவரது உணவுப்பழக்கத்தைக் கண்காணித்தால் போதும்.

அவரின் கதை அனைவருக்கும் ஒரு முக்கிய செய்தியினைத் தருகிறது. ஒவ்வொருவரும் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தின் தேவைகளுக்கும், வரவு செலவு களுக்கும் பொருத்தமான மருத்துவக் காப்புறுதித் திட்டங்களின் பாதுகாப்பைப் பெறவேண்டும். நீங்கள் உயர்தர படுக்கைப் பிரிவுகளில் அல்லது தனியார் மருத்துவமனைகளில் தங்க விரும்பினால், அடிப்படை மெடிஷீல்டுக்கு அப்பால் கூடுதல் பாதுகாப்பு அளிக்கும் மெடிசேவ் அங்கீகாரம் பெற்ற தனியார் திட்டங்களை நீங்கள் பெறவேண்டும்.

## திருவாட்டி சுமானாவின் கட்டணம்

| | |
|---|---|
| அரசாங்கத் தள்ளுபடிக்கு முன்பு மொத்த கட்டணம்:<br>அரசாங்கத் தள்ளுபடிக்குப் பிறகு மொத்த கட்டணம்: | $57,525<br>$26,407 |
| மெடிஷீல்டில் இருந்து கோரக்கூடிய கட்டணத்தொகை<br>• B2 வகுப்பில் 35 நாட்கள், 20 நாட்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில்*<br>• அறுவை சிகிச்சை<br>* நாள் ஒன்றுக்குக் கோரக்கூடிய அதிகபட்சத் தொகை<br>• வழக்கமான வகுப்பு: $250<br>• தீவிர சிகிச்சைப் பிரிவு: $500 | <br>$18,850<br>$18,750<br>$100 |
| கழிப்புத்தொகை கழிப்பு<br>• B2 வகுப்புக்கு ஆண்டுக்கு $1,500 | ($1,500) |
| இணைத்தொகை கழிப்பு | ($1,985) |
| மெடிஷீல்டில் கோரும் தொகை | $15,365 |
| மெடிசேவில் இருந்து கட்டிய தொகை | $4,412 |
| ரொக்கமாகக் கட்டிய தொகை | $6,630 |

நோயாளி ரொக்கமாகக் கட்டிய தொகையின் விகிதம்: 25%

> மெடிஷீல்டில் முதலீடு செய்யும் முடிவு பலனளித்தது. நீங்கள் இதில் கொஞ்சம் பணம் போடுகிறீர்கள், ஆனால் அதைவிட அதிகமாக நீங்கள் அதிலிருந்து கோரலாம். அதுவும் மருத்துவச் செலவுகள் மிக அதிகமாகக்கூடும் என்ற நிலையில் இது எப்போது தேவைப்படும் என்று உங்களுக்குத் தெரியாது.
>
> **- திரு அப்துல் ஹமீது முகமது**



மேலும் விவரங்களுக்கு, செல்லவும் **www.moh.gov.sg**